நல்லூர் இளை நூலகம்
மாநகர ... மன்றம்
யாழ்ப்பாணம்

பக்கங்கள் ஆறு


Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

கடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2023 சித்திரை 25 சனிக்கிழமை (08-05-1993) UTHAYAN—A Lively National Tamil Daily கதிர் 161

# பிரபாவுடன் நேரில் பேசவே புதிய ஜனாதிபதி டி.பி. விருப்பம்



விஜேதுங்கா

## தெரிவுக்குழு சிபார்சுக்கும் காத்திருப்பதாகக் கூறுகிறார்

கொழும்பு, மே 8

இனப் பிரச்சினையைத் தீர்க்கும் பொருட்டு தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் திரு. வே. பிரபாகரனுடன் நேரில் பேசுவதற்கே தாம் விரும்புவதாக புதிய ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா நேற்றுத் தெரிவித்தார்.

வடக்கு - கிழக்குப் பிரச்சினையை அவசரமாகத் தீர்த்துவைக்க வேண்டியுள்ளது. அதில் நான் அக்கறையாக உள்ளேன். அதற்காக விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவருடன் நேரடியாகப் பேசுவதற்கு நான் தயாராக உள்ளேன்.- என்று கூறிய புதிய ஜனாதிபதி—

ஒரு சந்தர்ப்பத்தில், இனப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்குத் தாம் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் சிபார்சுகளை எதிர்பார்த்திருப்பதாகவும் — செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட பின்னர் திரு. விஜேதுங்கா மக்களுக்கு விடுத்த செயிதியிலும், உள் நாட்டு, வெளிநாட்டுச் செய்தியாளர்கள் மாநாட்டிலும் இனப்பிரச்சினை சம்பந்தமாக பின்வரும் கருத்துக்களைத் தெரிவித்திருந்தார்.

(6ஆம் பக்கம் பார்க்க)



பிரபா

## இன்றும் கிளாலி படகுச்சேவை

கிளாலி — பூநகரி படகுச் சேவை இன்றும் வழமையான நேரத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## ஊரடங்கு நீக்கம்

கொழும்பில் வன்முறைச் சம்பவங்களைத் தடுப்பதற்காக நேற்று முன்தினம் இரவு அமுல் செய்யப்பட்ட ஊரடங்குச் சட்டம் நேற்றுக் காலையுடன் நீக்கப்பட்டது.

# ஜனாதிபதியாக டி.பி. விஜேதுங்க

## நேற்று ஏகமனதாகத் தெரிவு

கொழும்பு, மே. 8

ஸ்ரீலங்காவின் புதிய ஜனாதிபதியாக டிங்கிரி பண்டா விஜேதுங்காவை நாடாளுமன்றம் நேற்று ஏகமனதாகத் தெரிவு செய்தது.

நாடாளுமன்றம் நேற்றுக் காலை கூடிய போது ஜனாதிபதி பதவிக்கு விஜேதுங்காவின் வேட்பு மனு மட்டுமே சமர்ப்பிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து விஜேதுங்கா புதிய ஜனகதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்பதை நாடாளுமன்ற செயலாளர் நாயகம் நிஹால் செனவிரத்ன அறி

(5 ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர்களுக்கு கூடுதல் அதிகாரம்

பிரேமதாஸா ஆட்சிக் காலத்திலும் பார்க்க விஜேதுங்கவின் காலத்தில் அமைச்சர்களுக்கு கூடுதல் அதிகாரம் இருக்கும் என எதிர்பார்க்கலாம்,

இவ்வாறு அரசியல் ஆய்வாளர்களை மேற்கோள் காட்டி பி.பி.ஸி அறிவித்தது.

## மீண்டும் சபை மே 20 இல் கூடும்

புதிய ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்காக நேற்றுக் கூடிய நாடாளுமன்றம் மீண்டும் எதிர்வரும் 20 ஆம் திகதி கூடும் என அறிவிக்கப்பட்டது.

எதிர்வரும் 17 ஆம் திகதி மாகாணசபைத் தேர்தல்கள் நடைபெற்று, முடிவுகள் வெளியான கையோடு நாடாளுமன்றம் கூட இருப்பது குறிப்பிடத்தக்கது. (உ-எ)

# பிரதமர் பதவி ரணிலுக்கு!

கொழும்பு, மே 8

ஸ்ரீலங்காவின் புதிய பிரதம மந்திரியாக ரணில் விக்கிரமசிங்க நியமிக்கப்பட்டார்.

புதிய ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க இந்த நியமனத்தைச் செய்தார்.

இதுவரை காலமும் பிரதம மந்திரியாகச் செயற்பட்டு வந்த டி. பி. விஜேதுங்க, புதிய ஜனாதிபதியாக நேற்று தெரிவு செய்யப்பட்டதை அடுத்து அவர் தமது இடத்துக்கு ரணில் விக்கிரமசிங்காவை நியமித்தார்.

தற்போது 44 வயதாகும் ரணில் விக்கிரமசிங்க 1977ஆம் ஆண்டு தமது 28 வயதில் பியகம தொகுதி எம் பியாகத் தெரிவு செய்யப்பட்டார். அன்று முதல் பிரதி அமைச்சராகவும் பின்னர் தொடர்ந்து அமைச்சராகவும் அவர் செயற்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# அதே அமைச்சரவை!

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான—22 பேர் கொண்ட— அமைச்சரவை புதிய ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க முன்னிலையில் நேற்று பதவிப் பிரமாணம் செய்து கொண்டது.

ஜனாதிபதி பிரேமதாஸா கடைசியாக நியமித்திருந்த அனைத்து அமைச்சர்களையும் புதிய ஜனாதிபதி விஜேதுங்க அப்படியே அந்தந்த அமைச்சுகளுக்குப் பொறுப்பாக நியமித்தார்.

தாம் பிரதம மந்திரியாகச் செயற்பட்டபோது தம்முடன் வைத்திருந்த நிதி அமைச்சு, பாதுகாப்பு ராஜாங்க அமைச்சு ஆகியவற்றை ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க தம்முடன் தொடர்ந்து வைத்துக் கொண்டார். அந்த அமைச்சுக்கள் வேறு அமைச்சர்களுக்கு வழங்கப்படவில்லை.

சபை முதல்வராக போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் விஜேபால மெண்டிஸ் நியமிக்கப்பட்டார்.

# வவுனியாவில் குண்டுவீச்சு!

யாழ்ப்பாணம், மே 8

வவுனியா மருதோடையில் 'புக்காரா' விமானங்கள் மக்கள் குடியிருப்புகள் மீது நேற்றுக் காலை குண்டுவீச்சு மற்றும் றொக்கட் தாக்குதல்கள் நடத்தின. இதனால் பாடசாலை, வீடுகள் உட்பட பல கட்டடங்கள் சேதமடைந்தன.

நேற்றுக் காலை 7.45 மணியளவில் மருதோடை கிராமத்தை வட்டமிட்ட இரு புக்காரா விமானங்கள் மூன்று பாரிய குண்டுகளையும், பதின்மூன்றுக்கும் மேற்பட்ட றொக்கட் மோட்டர்களையும் வீசின.

இத்தாக்குதல்களினால் மருதோடை அரசினர் தமிழ் கலவன் பாடசாலையும், அதனைச் சூழவுள்ள பல வீடுகளும் பலத்த சேதமடைந்தன.

பாடசாலை கட்டடம் பலத்த சேதமடைந்ததுடன்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# நேரடி பேச்சுக்கான வாய்ப்பு மிகக் குறைவாகவே உள்ளது

லண்டன், மே 8

"இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான நேரடிப் பேச்சுக்கள் இடம்பெறுவதற்கு வாய்ப்புகள் மிகக் குறைவாகவே உள்ளன."

—பி பி.ஸி. செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில் கொழும்புச் செய்தியாளர் ஒருவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

பிரேமா கொலைச் சம்பவம் தொடர்பாக பொலீஸ் தரப்பின் சந்தேகம் புலிகள் பக்கமே திரும்பியுள்ளது.

இந்நிலையில் அரசு புலிகளுடன் நேரில் பேசுவதக்கு வாய்ப்புகள் இல்லை என்றே நான் கருதுகின்றேன்.—என்றார் அவர்.

பி.பி.ஸி. தனது விமர்சனத்தில்—

கடந்த சில ஆண்டுகளாக இலங்கை அரசியலை கெடுத்து வந்த கொடிய தனிப்பட்ட காழ்ப்புணர்ச்சிகள் ஓரளவு தணியக்கூடும் என்று தெரிவித்துள்ளது.

விஜேதுங்கா புலிகளுடன்

(5 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாத்தறை மாவட்டத்தில் தேர்தல் வன்முறைகள்

லண்டன், மே 8

மாத்தறை மாவட்டத்தில் மாகாணசபைத் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டு வரும் எதிர்க்கட்சிப் பிரமுகர்களுக்கு எதிராக அச்சுறுத்தல் மற்றும் தாக்குதல் சம்பவங்கள் அடிக்கடி இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

1987, 1989 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற தேர்தல்களின்போது இடம்பெற்ற ஒழுங்கீனங்கள் இம்முறையும் அங்கு இடம்பெறலாம் என அச்சம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (உ-6)

# புதிய ஜனாதிபதிக்கு சபையில் நேற்று பாராட்டு, வரவேற்பு

## எதிர்க்கட்சியினர் மகிழ்ச்சி தெரிவிப்பு

கொழும்பு, மே 8

நேற்று நாடாளுமன்றத்தில் புதிய ஜனாதிபதியாக டி.பி. விஜேதுங்கா ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டதை அடுத்து, அவரைப் பாராட்டி சபையில் பலரும் உரையாற்றினர்.

நாடாளுமன்றத்தில் வைத்து புதிய ஜனாதிபதியை ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களும், எதிர்க்கட்சிகளைச் சேர்ந்தவர்களும் கைலாகு கொடுத்து வரவேற்றனர்.

எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா வாழ்த்திய சமயம், ஜனாதிபதி விஜேதுங்கா பூரிப்புடன் அதனை ஏற்றுக் கொண்டார்.

எம். பிக்கள் கூட்டத்தில் நின்ற சிறிமாவோவிடம் மிக அருகில் சென்று குனிந்து நின்று தலையசைத்து அவரிடம் ஜனாதிபதி அன்புடன் உரையாடியதை ரூபவாஹினி ஒளிபரப்பியது.

சபாநாயகர் தமது பாராட்டுரையில் கூறியதாவது:-

இந்த நாட்டின், மக்களின் எதிர்காலம் அமைதியும் சுபீட்சமும் நிறைந்ததாக இருக்கக்கூடிய வகையில் புதிய ஜனாதிபதி நாட்டை வழி நடத்திச் செல்வார் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

### வரலாற்று முக்கியத்துவம்

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா பேசுகையில்—

"நாடாளுமன்ற வாக்களிப்பின் மூலம் ஜனாதிபதி ஒருவர் தெரிவு செய்யப்பட்டது ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியாகும். பிரேமதாசாவின் கொள்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்காக ஜனாதிபதி பதவியை ஏற்று, நாடாளுமன்றத்தில் இருந்து விஜேதுங்கா விடைபெறுகின்றார்" — என்று தெரிவித்தார்.

புதிய கொள்கைகளையும் நோக்கங்களையும் செயல்படுத்துவதே புதிய ஜனாதிபதியின் பணியாகும் என்றும் அவர் கூறினார்.

### சிறிமாவோ பாராட்டு

எதிர்க்கட்சித் தலைவர் சிறிமாவோ பண்டாரநாயக்கா புதிய ஜனாதிபதியைப் பாராட்டிப் பேசுகையில்—

பல ஆண்டுகள் அனுபவம் வாய்ந்த 'புதிய ஜனாதிபதி' கட்சிக்கு அப்பால் நின்று நாட்டுக்கு சேவையாற்றுவார் என்று நம்புகின்றேன்.

கடந்த காலத்தில் நாட்டில் சிறந்த முறையில் செயல்பட்ட ஜனநாயக நாடாளுமன்ற முறைக்கு புதிய உந்து சக்தி அளிக்கப்படவேண்டிய அவசியத்தையும் நான் வலியுறுத்த விரும்புகின்றேன்." என்றார்.

அமைச்சர் தொண்டமான் தமது உரையில்—

நாட்டின் சமாதானத்துக்கும் சுபீட்சத்துக்கும் மறைந்த பிரேமதாசா கடைப்பிடித்த கொள்கைகளை புதிய ஜனாதிபதியும் பின்பற்றுவார் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் தினேஷ் குணவர்த்தனா, ஐக்கிய சோஷலிஸ முன்னணியின் சார்பில் அத்தாவுட செனவிரத்ன, முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம். எச். எம். அஷ்ரப் ஆகியோரும் புதிய ஜனாதிபதியைப் பாராட்டிப் பேசினர்.

ஈ. பி. ஆர். எல். எவ்வைச் சேர்ந்த சுரேஷ் பிரேமச்சந்திரன் உரையாற்றுகையில்—

"இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதே நாட்டில் உள்ள முக்கிய பிரச்சினையாகும். புதிய ஜனாதிபதி இந்த விஷயத்தில் துணிவோடு செயல்படுவார் என்று நம்புகிறோம்." — என்றார்.

COUNCIL OF NGO, JAFFNA

உழைப்பாளரை இழந்த பெண்களின்

புனர்வாழ்வுக்கான ஆய்வுப்பட்டறை

மேற்படி ஆய்வுப்பட்டறையில் கலந்துகொள்ள விரும்பும் அரசசார்பற்ற நிறுவனங்கள் தங்களின் பெயர் விவரங்களுடன் இணைய பணிமனையில் உள்ள படிவங்களைப் பெற்று பூர்த்தி செய்து 12-05-93 முன் எமக்கு அனுப்பி வைக்கவும்.

யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம்,
100, இராசாவின் தோட்டம்,
யாழ்ப்பாணம்.

(சி/5101)

தீவகம் தம்பாட்டி காந்திஜி நாடகமன்றத்தினர்

பெருமையுடன் வழங்கும்

"மாவீரன் பண்டாரவன்னியன்"

(வரலாறு தென்மோடி நாட்டுக்கூத்து)

இடம்: நாவாந்துறை சென். மேரிஸ் கலை அரங்கம்.

காலம்: 08 - 05 - 93 இன்று மாலை 7.00 மணி

அன்புடன் அழைக்கின்றார்கள் தம்பாட்டி காந்திஜி நாடக மன்ற நிர்வாகத்தினர்

விளம்பர அன்பளிப்பு:
வே. கதிர்காமு குடும்பத்தினர்

(25571)

NURSES TRAINING

தாதி பயிலுநர்களுக்கான வெற்றிடம்

தாதி பயிலுநர்களுக்கான விண்ணப்பங்கள் மானிப்பாய் கிறீன் மெமோறியல் வைத்தியசாலை வில்லிஸ் பியர்ஸ் தாதியர் கல்லூரிக்கு கேட்கப்படுகின்றன.

இரண்டு தடைவைக்கு மேற்படாது G.C.E. O/L சாதாரணப் பரீட்சையில் 6 பாடங்களில் சித்தியெய்தி இருப்பதுடன் தமிழ், ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம் சுகாதாரம் ஆகியவற்றினுள் 2 இல் திறமைச் சித்தி பெற்றிருப்பவர்கள் வைகாசி 31 க்கு முன் விண்ணப்பிக்கவும்.

வயது 18 — 22 ற்கு உட்பட்டவர்கள். விண்ணப்பப் படிவங்கள் வைத்தியசாலை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவும்.

அனுப்ப வேண்டிய முகவரி:

PRINCIPAL,
SCHOOL OF NURSING,
Green Memorial Hospital, Manipay.

[சி4988]

கண்ணீர் அஞ்சலி

அமரர் செல்லத்துரை சிவகுரு

கொக்குவில் ஸ்ரீ சாயி துர்க்காதேவி ஆலய ஆரம்ப கால செயலாளரான காலஞ்சென்ற அமரர் செல்லத்துரை சிவகுரு அவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பரிபாலன சபை

ஸ்ரீ சாயி துர்க்காதேவி ஆலயம்,
கொக்குவில்.

(25574)

# பணிவோடு பொறுப்பை ஏற்கிறாராம் விஜேதுங்கா

கொழும்பு, மே 8

எமது நாட்டை வழி நடத்திச் செல்லக்கூடிய பொறுப்பைப் பணிவோடு நான் ஏற்றுக்கொண்டுள்ளேன்.

புதிய ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டதும் திரு. விஜேதுங்கா நாடாளுமன்றத்தில் பேசுகையில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அவர் சொன்னதாவது:-

அதிகார வெறிக்கும் சகிப்புத்தன்மையின்மைக்கும் இடமளியாமல் புதிய சமூக அமைப்பு ஒன்றை உருவாக்குவதற்கு நான் பாடுபடுவேன்.

நம்பிக்கைகளையும் அபிலாஷைகளையும் பகிர்ந்து கொள்ளும் பங்காளிகளாக லட்சியங்களை அடைவதற்குப் பாடுபட என்னோடு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இணைந்து கொள்ள வேண்டும்.

என்னிடம் ஒப்படைக்கப்பட்ட புதிய பொறுப்புக்கள் சபையில் உள்ள இரு தரப்பினருடனும் தொடர்பு கொள்வதற்கான வாய்ப்பை ஒருபோதும் குறைக்க மாட்டாது என உறுதி கூறுகின்றேன்.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் எனது கடமைகளை தொடர்ந்தும் நான் நிறைவேற்றுவேன்.

பரஸ்பர நல்லெண்ணத்தின் அடிப்படையில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எனக்கு வழிகாட்டிகளாக இருப்பார்கள் என்று நம்புகின்றேன்.

மக்கள் வைத்துள்ள அசையாத நம்பிக்கையைக் காப்பாற்றுவதே எனது முயற்சியாக இருக்கும், அதற்குத் துரோகமாக ஒருபோதும் செயற்பட மாட்டேன்.

மாபெரும் தலைவர் ஒருவரின் மறைவு எமது வரலாற்றில் இடம்பெற்றுள்ளது. எமது தேசியவாழ்விலும் மற்றும் நெருக்கடிகளிலும் முக்கிய பங்கு வகித்த தலைவர் பிரேமதாஸா ஆவார் - எமது மக்களின் நம்பிக்கைகளுக்கும் அபிலாஷைகளுக்கும் எதிர்பார்ப்புகளுக்கும் உந்துகோலாகவும் அவர் இருந்தார்.

எனது லட்சியங்களும் எண்ணங்களும் இந்த நாட்டில் உள்ள சாதாரண மக்கள் மத்தியில் இருந்து எனது வாழ்க்கையின் ஆரம்பத்தில் ஏற்பட்டவையாகும் அவர்களின் அபிலாஷைகள் எனக்கு நன்கு தெரிந்தவை.

அவர்களின் பாரம்பரிய வாழ்க்கை முறைகள் அனைத்தும் எனக்குப் பழக்கமானவை.

உரியவருக்கே மதிப்பு அளிக்க வேண்டும் என்பது எனது நீண்ட கால கடப்பாடாக இருந்து வந்துள்ளது"— என்றார் அவர்.

# தேர்தல்களை உடன் நடத்தக் கோரிக்கை

## எதிர்க்கட்சிகள் விடுத்துள்ளன

மணிலா, மே 8

ஜனாதிபதித் தேர்தல், பொதுத் தேர்தல் இரண்டையும் விரைவில் நடத்த வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் கோரியிருப்பதாக செய்தி ஏஜென்ஸி ஒன்று தெரிவித்தது.

இதற்கு ஏற்ற வகையில் —

ஒரு ஜனாதிபதி தமது பதவிக் காலம் முடிவடைய முன்னர் மரணமானால் அவரது எஞ்சிய பதவிக் காலத்துக்கு நாடாளுமன்றத்தினால் தெரிவு செய்யப்படும் ஒருவர் ஜனாதிபதி பதவி வகிக்கலாம் என்று தெரிவிக்கும் அரசமைப்புப் பிரிவைத் திருத்தியமைக்க வேண்டும் என்றும் எதிர்க்கட்சிகள் வலியுறுத்தியுள்ளன.

பிரேமதாஸா மற்றும் ஜெயவர்த்தனா ஆகியோர் நடத்திய சர்வாதிகார ஆட்சியினால் நாடு பெரும் நெருக்கடிக்குள் சிக்கியுள்ளதாக சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோபண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார். (உ-எ)

# அரசியலுக்கு ஹேமா?

கொழும்பு, மே 8

கொலையுண்ட ஜனாதிபதி பிரேமதாசாவின் பாரியார் ஹேமா பிரேமதாச அரசியலில் பிரவேசிக்கும் வாய்ப்புக்கள் உள்ளன என்று அரசியல் விமர்சகர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

பிரேமாவின் இறுதிச் சடங்கில் திருமதி ஹேமா பிரேமதாச நன்றியுரையாற்றுகையில் "எனது கணவரினால் ஆரம்பிக்கப்பட்ட பணிகளைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வேன்" என்று கூறியிருப்பது அவரது எதிர்கால அரசியல் அபிலாஷைகளைப் பிரதிபலிப்பதாக அரசியல் விமர்சகர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

# கொழும்பில் வாகனங்களை மறித்து திடீர் சோதனை

கொழும்பு, மே 8

விடுதலைப் புலிகள் கொழும்புக்குள் வெடிகுண்டுகளைக் கடத்தியிருக்கலாம் என்ற தகவலைத் தொடர்ந்து—

இராணுவத்தினர் நேற்றுக் காலை தலைநகரில் திடீரென வாகனங்களை வழி மறித்து சோதனை நடத்தினார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது. (உ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் ... யாழ்ப்பாணம்



# தமிழரிடமிருந்து கிழக்கைப் பறிக்க அரசு திட்டமிட்டு செயலாற்றுகிறது

## இணைப்பு எதிர்ப்பின் பின்னணி குறித்து ஆய்வாளர்கள் கருத்து

யாழ்ப்பாணம், மே 8

தமிழரின் பாரம்பரிய பிரதேசமான கிழக்கு மாகாணத்தை தமிழர்களிடம் இருந்து பறிக்க அரசும், அரச அதிகாரிகளும் திட்டமிட்டு தீவிரமாகச் செயல்பட்டு வருவதாக அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

முற்றுமுழுதாக சிங்கள மயமாக்கப்பட்ட அம்பாறைத் தொகுதி அம்பாறை மாவட்டத்தில் இருப்பதால் அம்பாறை மாவட்டத்தையும்—

சேருவிலவில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்களின் முழுப் பயன்பாட்டையும் பெறும் நோக்குடன் திருகோணமலை மாவட்டத்தையும்—

மகாவலி திசை திருப்பும் திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு மாவட்டம் பெறப்போகும் பயன்பாட்டை அனுபவிக்கும் நோக்குடன் மட்டக்களப்பு மாவட்டத்தையும் வடக்கு—கிழக்கு இணைப்பு மூலம் இழப்பதற்கு அரசு தயார் இல்லை என்று தெரிவிக்கப்படுகிறது

கிழக்கில் அபிவிருத்தித் திட்டங்கள் என்ற போர்வையில் சிங்களக் குடியேற்றங்களை மேற்கொள்ள அரசு பல கோடி ரூபா செலவில் திட்டங்களை செயற்படுத்த உள்ளதாகவும் அதற்காக வெளிநாட்டு அமைப்புகளுடன் ஒப்பந்தங்கள் மேற்கொண்டு வருவதாகவும் — கூறப்படுகிறது.

தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசத்தை சிங்கள மக்களின் பிரதேசமாக்கவே வடக்கு கிழக்கு இணைப்புக்கு அரசும், எதிர்க்கட்சிகளும் கூட்டாக எதிர்ப்பு தெரிவித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(இ-3)

## குரக்கன் பயிர் செய்கை

வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவில் 33 ஹெக்டேர் நிலப்பரப்பில் குரக்கன் செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

இதற்குப் போதியளவு மண்ணெண்ணெய்யை விநியோகிக்க பிரதேச செயலகம் நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

குரக்கன் செய்கைக்கென தற்போது விவசாயிகளுக்கு முதலாம், இரண்டாம் கட்டமாக மண்ணெண்ணெய் விநியோகிக்கப்படுகிறது. [த-175]

## 870 ஒய்வூதியர் நஷ்டஈடு கோரி விண்ணப்பம்

யாழ். மாவட்ட ஓய்வூதியர்களில் சுமார் 870 பேர் தமது உடைமைகளுக்கு ஏற்பட்ட நஷ்டங்களுக்கு நஷ்டஈடு கோரி யாழ். அரசாங்க அதிபருக்கு விண்ணப்பித்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இராணுவ நடவடிக்கைகளின் போது வான்தாக்குதல் மற்றும் ஷெல் தாக்குதல்களினால் சேதமடைந்த வீடுகளுக்கும், உடைமைகளுக்கும் நஷ்டஈடு வழங்குமாறு இவர்கள் விண்ணப்பித்துள்ளனர்.

இவர்களுடைய விண்ணப்பங்கள் உரிய நடவடிக்கைக்காக புனர்வாழ்வு, புனரமைப்பு [றெப்பியா] அமைச்சுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக செயலக உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்துள்ளார். [ஒ-175]

## சாதாரணமான குடும்பத்தில் பிறந்து ஜனாதிபதியானார்

ஸ்ரீலங்காவின் புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள டி. பி. விஜேதுங்க 1922 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 15ஆம் திகதி கண்டிக்கு அண்மையில் உள்ள பொல்காஹமக எனும் கிராமத்தில் சாதாரணமான குடும்பத்தில் பிறந்தார்.

அவர் 1942 ஆம் ஆண்டு கூட்டுறவு இலாகாவில் அரசாங்க சேவையில் சேர்ந்துகொண்டார். 1947 முதல் 1952 வரை உணவு, கூட்டுறவு அமைச்சரின் அந்தரங்கக் காரியதரிசியாகவும் 1952 முதல் 1956 வரை உள் விவகார அமைச்சரின் அந்தரங்கக் காரியதரிசியாகவும் பணியாற்றினார்.

1946 ஆம் ஆண்டில் ஐக்கிய தேசியக் கட்சியில் சேர்ந்த டி. பி. விஜேதுங்க 1960 பொதுத் தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்தார். ஆனால் 1965இல் வெற்றி கண்டார்.

1977க்கும் 1988க்கும் இடையில் அவர் தகவல் ஒலிபரப்பு மின்சக்தி நெடுஞ்சாலை, தபால் தந்தித் தொடர்பு, விவசாய அபிவிருத்தி ஆராய்ச்சி உணவுத்துறை அமைச்சராகப் பணிபுரிந்தார்.

1988 ஏப்ரல் மாதத்தில் அமைச்சரவையிலிருந்தும் ராஜினாமாச் செய்து வடமேற்கு மாகாண கவர்னராகப் பதவியேற்றார்.

மீண்டும் 8 மாதங்களுக்குப் பின்னர் அவர் கவர்னர் பதவியைத் துறந்து பொதுத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். பின்னர் பிரதமரான அவர் நிதி அமைச்சர் பதவியையும் வகித்தார்.

திருமணமான அவருக்கு ஒரு மகள் உண்டு.

(த-அ)

## நன்றி

எம்மால் 12-04-1993 இல் தவறவிடப்பட்ட சிங்கப்பூர் சங்கிலியைக் கண்டெடுத்து உதயன் பணிமனையில் ஒப்படைத்த இளந்தாரியார் கோவிலடி, இணுவில் கிழக்கு, இணுவிலைச் சேர்ந்த திரு. க. சுந்தரமூர்த்திக்கு எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

-க. இராசநாயகம்
''செல்வகம்'',
காரைக்கால் வீதி,
இணுவில் கிழக்கு,
இணுவில். (25563)

# வதிவிட வேளாண்மை போட்டி: வெற்றி பெற்றோர் விவரம்

யாழ்ப்பாணம், மே. 8

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தினால் நடத்தப்பட்ட 1993 ஆம் ஆண்டு வதிவிட வேளாண்மைப் போட்டியில் வெற்றி பெற்றோர் வருமாறு;

**1. மாவட்ட மட்டம்**

1. குமாரசாமி கிருஸ்ணானந்தன்—அல்லாரை வடக்கு, 2. இளம்சிங்கம் செல்லக்குமரன் — செம்பியன் பற்று, தெற்கு. 3. கெங்காதரன் சந்திரசேகரம் — சண்டிலிப்பாய் மேற்கு.

**2. கோட்ட மட்டம்**

அ) வலிகாமக் கோட்டம்

1. பொன்னம்பலம் லோகநாதன் — கொக்குவில், 2. வினாயகமூர்த்தி சகாதேவன் —அச்சுவேலி மேற்கு, 3. சுப்பிரமணியம் கந்தசாமி— கோப்பாய் வடக்கு.

ஆ) வடமராட்சிக்-கோட்டம்

1. சுமதி விஸ்வலிங்கம்— கம்பர்மலை, உடுப்பிட்டி, 2. செல்லமுத்து ரகுநாதன், துன்னாலை வடக்கு, 3. வாசுகி விசுவலிங்கம் —கெருடாவில் வடக்கு.

இ) தென்மராட்சிக்-கோட்டம்

1. செல்லையா கணபதிப்பிள்ளை—அல்லாரை வடக்கு, 2. ராசதுரை சுகுமார்—அல்லாரை வடக்கு, 3. சுப்பிரமணியம் கருணாகரன் — முகமாலை, பளை.

**3. வட்ட மட்டம்**
(உதவி அரசாங்க அதிபர் பிரிவு மட்டம்)

நல்லூர் மட்டம்

1. நாராயணசுவாமி சிறி விவேகானந்தன் –அரியாலை, 2. செல்வரட்ணம் லிங்கேஸ்வரன் — திருநெல்வேலி, 3. சின்னையா செல்வரட்ணம்— அரியாலை.

**ஆறுதல் பரிசு**

1. தம்பிப்பிள்ளை தனபாலசிங்கம் — அரியாலை, 2. திரு. குமாரசிங்கம் நித்தியானந்தன் — வண்ணார்பண்ணை, 3 தயானுஷா வரதராஜன்— வண்ணார்பண்ணை, 4. பேரம்பலம் மெய்யழகன் — கொக்குவில், 5. கதிரவேலு சூரியகுமாரன் — திருநெல்வேலி, 6. மகேந்திரராசா பிரகலாதன் — வண்ணார்பண்ணை, 7. திரு. நன்னி அருளானந்தம் — கொட்டடி, யாழ்ப்பாணம், 8. திரு. மார்க்கண்டு திருநாவுக்கரசு — அரியாலை, 9. திரு. கனகசபை பற்குணநாதன் — அரியாலை, 10. திரு மகாதேவா சுதாகரன்— நல்லூர்.

**வட்ட மட்டம்**

கோப்பாய் வட்டம்

1. நடராஜா திருஞானசம்பந்தர் நீர்வேலி வடக்கு, 2. தங்கேஸ்வரி கந்தையா — ஆவரங்கால் மேற்கு, 3. சிவகௌரி தனபாலன் — சிறுப்பிட்டி கிழக்கு.

**ஆறுதல் பரிசு**

1. முருகேசு புஸ்பதேவி — புத்தூர் கிழக்கு, 2. வெள்ளையன் ஞானாம்பிகை — ஆவரங்கால் மேற்கு, 3. வித்தியானந்தன் கேதீஸ்குமார் — புத்தூர் மேற்கு, 4. முருகன் பரமன் — புத்தூர் மேற்கு, 5. ஜெயந்தி பொன்னுத்துரை — ஆவரங்கால் மேற்கு, 6. நடராஜா சிவசுப்பிரமணியம் — நீர்வேலி மத்தி, 7. தாமோதரன் சசிதரன் — உரும்பராய் வடக்கு, 8. ரஞ்சனி மாயகேஸ்வரன் — புத்தூர் கிழக்கு, 9. ஆறுமுகம் விமலாதேவி — புத்தூர் வடக்கு, 10. மாணிக்கம் இரத்தினமலர் — நீர்வேலி மேற்கு.

**உடுவில் வட்டம்**

1. திரு. தம்பிப்பிள்ளை ராமநாதன் இணுவில் மேற்கு, 2. தம்பிரத்தினம் மல்லிகாதேவி — சுன்னாகம் மேற்கு, 3. வை. வினாசித்தம்பி — கொக்குவில் தாவடி தெற்கு.

**ஆறுதல் பரிசு**

1. மயில்வாகனம் சர்வேஸ்வரன்—இணுவில் கிழக்கு. 2. இராசரத்தினம் வசந்தரூபன் — இணுவில் கிழக்கு, 3. தம்பு குமாரசாமி – உடுவில் வடக்கு, 4. சண்முகநாதன் பிரகதீஸ்வரன் — இணுவில் கிழக்கு, 5. சர்வானந்தன் சபேசன்—சுன்னாகம் தெற்கு, 6. செல்லத்துரை பத்மாவதி — இணுவில் வடகிழக்கு, 7. பொன்னுத்துரை மனோகுமார் — சுன்னாகம் தெற்கு. 8. கந்தவனம் பாலகிருஸ்ணன் — ஏழாலை கிழக்கு, 9. சின்னப்பொடி நடராஜா — கந்தரோடை மேற்கு, 10. ராகினி சிறிஸ்கந்தராஜா — உடுவில் தெற்கு.

**சண்டிலிப்பாய் வட்டம்**

1. பொன்னம்பலம் புஸ்பராணி — சுதுமலை வடக்கு, 2. கிருஸ்ணபிள்ளை இராசலிங்கம் — கட்டுடை மானிப்பாய், 3. சிவதரணி பசுபதிப்பிள்ளை — மானிப்பாய் வடக்கு.

**ஆறுதல் பரிசு**

எட்லின் றோஸ்மேரி — மானிப்பாய் வடகிழக்கு, 2. கணபதிப்பிள்ளை மகேந்திரன் — ஆனைக்கோட்டை, 3. சதாலட்சுமி ராசமோகன் — ஆனைக்கோட்டை, 4. கணேசு கமலதாசன் — மானிப்பாய் தெற்கு, 5. குணசிங்கம் செல்வலட்சுமி — மானிப்பாய் வடகிழக்கு. 6. சிவலிங்கம் நாகநந்தினி— மானிப்பாய் வடக்கு. 7 அரியரத்தினம் யோகரத்தினம் — மானிப்பாய் மேற்கு, 8. செல்லையா திருநாவுக்கரசு —சண்டிலிப்பாய் மேற்கு, 9. சின்னையா குணரத்தினம் — சுதுமலை வடக்கு, 10 மாணிக்கம் பூபதி — மானிப்பாய் வடக்கு.

(தொடரும்)

## தொழுநோய் ஆய்வு

யாழ்ப்பாணம், மே 8

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவைச் சேர்ந்த தனங்கிளப்பு பகுதியில் வசிப்பவர்களிடையே அண்மையில் தொழுநோய்க்கான ஆய்வு மேற்கொள்ளப்பட்டதுடன், சுகாதாரக் கருத்தரங்கும் நடத்தப்பட்டது.

இப்பகுதியில் தொழுநோய்க்கான அறிகுறிகள் காணப்படுவதால் எதிர்வரும் 15ஆம் திகதி பூரணமான ஆய்வு ஒன்று நடத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(த-162)

## 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**சட்டநாதன் சண்முகநாதன்**
[திட்ட பரிசோதகர்- இ. போ. ச]
தோற்றம்: 20—12—1943
மறைவு: 16—05—1987
திதி: 08-05-1993

ஆறாண்டுகள் ஓடி மறைந்தாலும், உங்கள் நினைவுகள் எம் அகத்தை விட்டு நீங்கா.

ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்:

பாசம் மிக்க:
மனைவி,
பிள்ளைகள்.
41, நொத்தாரிஸ் வீதி,
அரியாலை மேற்கு.
(25528)

**லியோ வீடியோ சென்ரர்**
வட்டு. மேற்கு. வட்டுக்கோட்டை.

✶ எமது புதிய வெளியீடுகள்

ரகுமான், ரம்பா கிருஷ்ணன் — பொன் விலங்கு
சிவகுமார், கார்த்திக் — பொண்ணுமணி
அரவிந், கே. ஆர். விஜயா — அம்மா பொண்ணு
(25567)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

நல்ல இன பெண்டம், வெள்ளடியன், பாமாஸ் கோழிக் குஞ்சுகளும், அடைவைப்பதற்கேற்ற முட்டைகளும், முட்டை இடும் கோழிகளும், வான் கோழி முட்டையும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: K. அன்னலிங்கம், சாந்தன் வீதி, கோண்டாவில் மேற்கு. (25565)

அடை வைக்கக்கூடிய நல்ல இன கோழிமுட்டைகள் எப்பொழுதும் பெற்றுக்கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், இல. 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (25494)

## உடன் விற்பனைக்கு

சீமையில் முயல் குட்டிகள் மலிவு விலையில் விற்பனைக்கு உண்டு. உடன் தொடர்பு கொள்ளவும்: இல. 101/1, செல்லர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (25562)

ஹைலைன் பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் மொத்தமாகவும், சில்லறையாகவும் உடன் விற்பனைக்குண்டு. "மல்லிகாபதி", சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (25534)

## பெயர் மாற்றம்

யாழ். நகரை வசிப்பிடமாகக் கொண்ட "கணேசா" ஆகிய எனது பெயர் கணேசலிங்கம் என மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை சகலருக்கும் அறியத்தருகிறேன். K.V. Kanesalingam, 298, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (25537)

## அம்பாள் திருமண சேவை

Vice Principal 32 வயது, I. P. T. 34 வயது, B. Sc. Teacher Zambia 30 வயது ஆகியோருக்கு மணப்பெண்கள் தேவை. தொடர்பு: ஞாயிறு காலை சின்னச்சாமிக் குருக்கள் சண்முகலிங்கம் ஐயர், வீரமாகாளி அம்மன் கோவிலடி, நல்லூர். (25555)

## வண்ணப்படம்

கவியோகி சுத்தானந்த பாரதியார் பிறந்த நினைவு தினம் 11 - 05 - 1993 இல். இவர் வண்ணப்படம் பெற்றுக் கொள்ள ரூபா 5/- பெறுமதியான முத்திரை அனுப்பவும். 'மிக்கிவைற்' (சி-5093)

## ரியூசன்

க. பொ. த. மாணவர்களுக்கு தனிப்பட்ட முறையில் ஆங்கிலம், கணக்கியல் முதலியன அனுபவம் உள்ள விரிவுரையாளரால் கற்பித்துத் தரப்படும். இல. 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (25560)

## சீயாக்காய் பவுடர்

மீண்டும் மலிவு விலையில் விற்பனையாகிறது. பேன், சொடுகு, அழுக்கு இல்லாமல் செய்யும் காவேரி சீயாக்காய் பவுடர் கண் குளிர்மைக்கு, கூந்தல் வளர்ச்சிக்கு பாவியுங்கள். தயாரிப்பாளர்கள்: கந்தசாமி அன் சன்ஸ், ஆடியபாதம் வீதி, நல்லூர். (25333)

## ஒத்துமாறல்

பயிற்றப்பட்ட விஞ்ஞான ஆசிரியர் கிளிநொச்சியில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு ஒத்துமாற (Mutual Transfer) விரும்புகிறார். தொடர்பு: இல. 40/4, கோவில் வீதி, சுண்டிக்குளி. (25500)

---

யாழ்ப்பாணம் வை. எம். சி. ஏ.

## வயோதிபர் இல்லம்

யாழ்ப்பாணம் வை. எம். சி. ஏ. ஸ்தாபனம் வயோதிபர்களுக்கான இல்லமொன்றை வெகு விரைவில் ஆரம்பிக்க இருக்கிறது.

இந்த இல்லம் சுண்டிக்குளிப் பகுதியில் மிகவும் விசாலமான வீடொன்றில் அமையவிருக்கிறது.

இந்த இல்லத்தில் தங்கியிருக்க விரும்பும் வயோதிபர் செலுத்த வேண்டிய கட்டண விபரங்களை திரு. எம். தம்பித்துரை, செயலாளர், வை. எம். சி. ஏ., யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

[சி/5098]

---

## அறிவித்தல்

**வ. இ. ச. சபை அறிமுறைப் பரீட்சை - 1993**

நாட்டின் தற்போதைய நிலைமை காரணமாக 1993 - 05 - 15, 1993 - 05 - 16 ஆகிய இரு தினங்களில் நடைபெறவிருந்த மேற்படி சபையின் அறிமுறைப் பரீட்சை மறு அறிவித்தல் வரை பின்போடப்பட்டுள்ளது என்பதை தேர்வு நாடிகளுக்கு அறியத்தருகிறேன்.

இ. சுந்தரலிங்கம்.
யாழ். மாவட்டக் கல்விப் பணிப்பாளரும்,
வ. இ. ச. சபைத் தலைவரும்.

(சி/5094)

---

உ

மீசாலை வேம்பிராய் - கான்றைச்சாட்டி

## அலாக்கிர பூதவரத விநாயகர் தேவஸ்தான

(கலட்டியிற் பிள்ளையார்)

# 10 ஆம் நாள் அலங்கார உற்சவம்

நாளை (09 - 05 - 1993) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணி முதல் சகஸ்ர சங்காபிஷேகம் (1008) நடைபெறும்.

மாலை 5 மணியளவில்
விசேட பூசை ஆராதனைகளோடு திருவூஞ்சலும் இடம்பெற்று விநாயகப் பெருமான் வீதியுலா வருவார்.

**சிறப்பு நிகழ்ச்சி**

★★ விவாத மேடை:

விடயம்: நிலைகுலையா வீரம் படைத்தவன் என்னும் நீண்ட புகழ் கொண்டவன் அனுமனா? கும்பகர்ணனா?

நடுவர்: திரு. த. நாகேஸ்வரன் அவர்கள் (ஆசிரியர்)

வாதிடுவோர்:

திரு. சோ. முரளி (ஆசிரியர்)
செல்வன் செ. கிள்ளிவளவன்
செல்வன் ஆ. சிவதாசன்

திரு. க. புவன்சிறீந்திரன் (ஆசிரியர்)
செல்வன் பா. ரகுசுதன்
செல்வன் து. சத்தியரூபன்.

★★ சாந்தன் குழுவினரின்
★ இன்னிசை மாலை ★

அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகிறார்கள்.

[25564]

உபயகாரரும், இந்து இளைஞர் மன்றமும்.

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



உதயம்: 07 — 06 — 1931

அஸ்தமனம்: 08 — 04 — 1993

அமரர்

**கதிரவேலு கனகரத்தினம் (காந்தி)**

(இலங்கை போக்குவரத்துச் சபை- முன்னாள் சாரதி)

தங்கள் பிரிவுத்துயரால் துயருறும்;
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,

"தாயகம்",
இல. 100/1, கண்டி வீதி,
கச்சேரியடி, யாழ்ப்பாணம்.

(25566)

---

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் செல்லத்துரை வரதலிங்கம்**

[இளைப்பாறிய அதிபர் - யாழ் / வேலணை சைவப்பிரகாச வித்தியாலயம், முன்னாள் யாழ். மாவட்ட சாரண ஆணையாளர், தீவுப்பகுதி செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி, தீவுப்பகுதி கால்நடை வளர்ப்போர் சங்கச் செயலாளர்]

மலர்வு: 25—09—1929

உதிர்வு: 12—05—1990

திதி: 08 - 05 - 1993

"நெருநல் உளனொருவன் இன்றில்லை என்றும் பெருமை உடைத்து இவ்வுலகு"

என்றும் நீங்காத நினைவுறுத்தி, இறைபதம் எய்திய எங்கள் குடும்பத் தலைவரின் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திக்கும்;

- குடும்பத்தினர் -

புளியங்கூடல்,
ஊர்காவற்றுறை.

(25554)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் ... மாநகர ... யாழ்ப்பாணம்

# உதயன்

## குருடன் வழியில் கண் தெரியாதவன்!

எதிர்பார்க்கப்பட்டது போலவே திரு. டி. பி. விஜேதுங்கா ஸ்ரீலங்காவின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட மூன்றாவது ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுவிட்டார்.

பெரும்பான்மைச் சிங்கள மக்கள் அவரிடமிருந்து பல விஷயங்களை எதிர்பார்ப்பார்கள். தெற்கில் நிலைபெற்றுள்ள அதிகாரவெறிக்கும், அரசியல் சகிப்புத்தன்மை இல்லாத அரசியல் வன்செயல்களுக்கும் முடிவுகட்ட வேண்டும் என்பது அவற்றில் முதன்மை பெறும்.

ஆனால் ஈழத்தமிழர்கள் புதிய ஜனாதிபதியாவது, இனப்பிரச்சினையை நியாயமான முறையில் அணுகி, யுத்தத்தை நிறுத்தி, தங்களது அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றுவதற்கு மனதாரச் செயற்படுவாரா என்று தங்களை மறந்து தமக்குள்ளே கேட்டிருக்கக் கூடும்.

ஆனால் அப்படி ஓர் எதிர்பார்ப்பை, நம்பிக்கையை நிலை மறந்தேனும், மதி மயங்கியேனும் மனதில் கொள்ளக் கூடாது என்று திரு. விஜேதுங்கா ஏற்கனவே எச்சரித்து விட்டார்.

இனப்பிரச்சினையைத் தீர்க்கும் விஷயத்தில் அரசாங்கம் கடைப்பிடித்து வந்த அணுகுமுறையில் மாற்றம் இருக்காது என்று கூறிவிட்டார்! அதாவது இராணுவ நடவடிக்கைகள் மூலம் தமிழர்களைப் பலமிழக்கச் செய்து, சிங்களவர்களுக்குச் சாதகமான ஒரு தீர்வை அவர்கள் மீது திணிப்பது என்ற கொள்கையில் மாற்றம் இருக்காது என்று வெளிப்படையாக உளந்திறந்து கூறிவிட்டார்.

ஜனாதிபதியாக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்ட பின்னர், உத்தியோகபூர்வமாக அவரது பதவி உறுதிப்படுத்தப்பட்ட பின்னர், செய்தியாளர்களிடம் நேற்றுப் பேசிய அவர், இனப்பிரச்சினை குறித்து, தாம் பழைய குருடி கதவைத் திறவடி என்ற நிலைப்பாட்டுடன் தான் உள்ளார் என்பதைத் தெட்டத் தெளிவாகக் காட்டி விட்டார்.

இனப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கு நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின சிபார்சுகளை நான் எதிர்பார்த்துள்ளேன் — என்று அவர் கூறியிருப்பது பிரேமதாசா கடந்த சுமார் ஒரு வருட காலமாக கூறிவந்த அதே வரிகள் தான். ஒரு சொல் கூட மாற்றமில்லை. எந்தச் சொல்லும இடம் மாறியும் வரவில்லை. அத்தனை அச்சொட்டாகச் சொல்லியிருக்கிறார் விஜேதுங்கா!

தெரிவுக்குழுவின் சிபார்சு எத்தகையது என்பது எல்லோருக்கும் தெரிந்த ஒன்று. தமிழர் தாயகத்தைத் துண்டாடுவதற்கு பிரேமதாசா தெரிவுக்குழு என்ற சிங்களக் குழு மூலம் முன்வைத்த சதித்திட்டமே அது! அந்தச் சதியை நிறைவேற்றுவதற்கு முன்னர் அவர் குண்டு வெடிப்புச் சதிக்கு இரையாகிவிட்டார். அவர் விட்டகுறை, தொட்ட குறையைத் தாம் தொடரப் போவதாக முந்திய குருவுக்கு மிஞ்சாத சீடராகப் பணிந்து கூறியிருக்கிறார் டி. பி.!

தெரிவுக் குழுவின் சிபார்சு தமிழர் பிரச்சினையை மேலும் சிக்கலாக்கி நிலைமையை மோசமாக்கும் என்பதை புதிய ஜனாதிபதி அறியாதிருப்பதேனோ? பாவம்! குருடன் சென்ற வழியில் நடக்கும் கண் தெரியாதவனாக இருக்கவே விஜேதுங்கா விரும்புவது எதிர்பார்க்காத ஒன்றல்லவே!

## ஆலயங்களில்

நாவற்குழி காதவாய்க்கால் விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவ அலங்காரத் திருவிழாக்கள் கடந்த மாதம் 28 ஆம் திகதியில் இருந்து நடைபெற்று வருகின்றன. இன்று சனிக்கிழமை 11 ஆம் நாள் உற்சவம் நடைபெறும். (க-51)

## வெளியீட்டு விழா

அகிலா பசுபதியின் (தூயவள்) ''நிமிர்வு'' கவிதைத் தொகுதி வெளியீட்டு விழா சட்டநாதர் வீதி இளங்கலைஞர் மன்றக் கலாமண்டபத்தில் நாளை மறுதினம் திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறும்.

விடுதலைப் புலிகளின் மகளிர் அமைப்பு வெளியீட்டுப் பிரிவைச் சேர்ந்த யூடி தலைமையில் நிகழ்வு இடம் பெறும்.

## நாளை

யாழ். மாவட்ட பாடசாலைகளின் பகுதி நேர ஆங்கில ஆசிரியர்கள் சங்கத்தின் ஒன்றுகூடலும் கருத்தரங்கும் நாளை ஞாயிறு காலை 9-30 மணிக்கு யாழ். கனகரத்தினம் மகா வித்தியாலயத்தில் சங்கத் தலைவர் திரு. எஸ். இராமநாதன் தலைமையில் நடைபெறும்.

ஆங்கில மொழியின் முக்கியத்துவம் பற்றியும், ''தமிழ் ஈழத்தில் ஆங்கில மொழி வளர்ச்சி'' பற்றியும் இளைப்பாறிய பேராசிரியர் கே. நேசையா கருத்துரை வழங்குவார். (ஒ)

## நாட்டுக்கூத்து

குருநகர், மே 8

யாழ் - பிரதான வீதி, திருமறைக் கலாமன்றக் கலையரங்கில் நடைபெற்றுவரும் நாட்டுக்கூத்து விழாவின் இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் இன்று மாலை 6.45 மணிக்கு ஆரம்பமாகும்.

இன்றையநிகழ்ச்சிகள் யாழ். உதவி அரசாங்க அதிபர் திரு. க. குணராசா தலைமையில் நடைபெறும். வட்டுக்கோட்டை நாட்டுக்கூத்து அபிவிருத்திச் சங்கம் வழங்கும் ''வீமன் புஸ்பயாத்திரை'', ''அருச்சுனன் பாசுபதம் பெறல்'', யாழ். கலைக்கூடம் வழங்கும் ''காத்தவராயன்'' (சிந்து நடைக்கூத்து). ஆகியன இன்று மேடையேறுகின்றன. (ஒ-51)

## விளையாட்டு

நல்லூர் செயலகப் பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான தடகள விளையாட்டு விழா இன்றும் நாளையும் தினசரி பிற்பகல் 2 மணி முதல் நடைபெறும்.

நல்லூர் பிரதேச செயலரும் மேலதிக அரச அதிபருமான திரு. ஆ. மகாலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் யாழ். பிரதேச செயலரும் மேலதிக அரச அதிபருமான திரு. க. குணராசா பிரதம விருந்தினராகப் பங்கு கொள்வார்.

கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் திரு. இ. மகேந்திரன், யாழ். இந்துக் கல்லூரி அதிபர் திரு அ. பஞ்சலிங்கம், யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி திரு. எஸ். கனகராசா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகப் பங்குபற்றுவர். (இ-143)

o o o

''டொனால்ட் கணேஷ குமார்'' வெற்றிக் கிண்ணத்துக்காக யாழ். சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட் போட்டித் தொடரின் கால் இறுதியாட்டத்தில் இன்று மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்க வி க. அணியை எதிர்த்து மானிப்பாய் பரிஷ் அணி மோதும். இன்று காலை 9 மணிக்கு

## தமிழகம் விஜயம் செய்த

# பிரதமர் ராவை வரவேற்க ஜெயலலிதா செல்லவில்லை

பிரதமர் பி. வி. நரசிம்மராவ் நேற்று சென்னைக்கு விஜயம் செய்தபோது அவரை வரவேற்க முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா விமான நிலையத்துக்குச் செல்லவில்லை.

ஆளுநர், மாநில நிதியமைச்சர் நெடுஞ்செழியன், மாநில காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி, சட்டசபை எதிர்க்கட்சித் தலைவர் எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் ஆகியோர் பிரதமரை வரவேற்க விமான நிலையம் சென்றிருந்தனர்.

# புலிகளின் நடவடிக்கை பற்றி சென்னையில் ராவ் கருத்து

சென்னை, மே 8

தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் தடுக்கப்பட வேண்டும்.

பிரதமர் பி.வி நரசிம்மராவ் சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் முன்கண்டவாறு தெரிவித்தார்.

காஞ்சி காமகோடி சங்கராச்சாரிய சுவாமிகளின் 100 ஆவது பிறந்த தின விழாவில் கலந்து கொண்ட பின்னர் புதுடில்லி திரும்பும் வழியில் சென்னையில் செய்தியாளர்களை பிரதமர் சந்தித்தார்.

# இந்திய கிழக்குத் தளபதி ஹெலி விபத்தில் பலி!

## 7 படையினரும் உயிரிழப்பு

புதுடில்லி, மே 8

பூட்டானில் நேற்று ஹெலிக்கொப்டர் விபத்து ஒன்றில் இந்திய இராணுவத்தின் கிழக்குப் பிராந்தியத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜமீல், அவரது மனைவி மற்றும் இந்திய விமானப் படையினர் ஏழு பேரும் கொல்லப்பட்டனர் என்று அறிவிக்கப்படுகிறது.

லெப்டினன்ட் ஜெனரல் ஜமீல் இந்திய அமைதிப் படையில் ஒருவராக வடக்கு - கிழக்குப் பகுதியில் பணிபுரிந்தவர் என்றும் —

அப்போது அவர் சிறந்த சேவையாற்றினார் என்றும் இந்திய வானொலி அறிவித்தது.

ஹெலிக்கொப்டர் விபத்துக்குள்ளான சம்பவம்பற்றி விசாரிக்க விசாரணை மன்றம் ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதாக இந்திய பாதுகாப்பு அமைச்சு நேற்று தெரிவித்தது. (உ-ள்)

## பிரேமாவின் இறுதிக் கிரியைகளில்

# எதிர்பார்த்ததிலும் குறைந்த எண்ணிக்கையான மக்களே

கொழும்பு, மே 8

மறைந்த ஜனாதிபதி பிரேமதாசாவின் இறுதி ஊர்வலம், இறுதிக்கிரியை நிகழ்ச்சி ஆகியவற்றில் எதிர்பார்த்ததிலும் குறைந்த எண்ணிக்கையான மக்களே கலந்துகொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

தலைநகர் கொழும்பில் கலவரங்கள் வெடிக்கலாம் என்று ஏற்கனவே பரவலாக ஊகம் எழுந்திருந்ததே மக்கள் வருகை குறைந்ததற்குக் காரணம் என்று நம்பப்படுகிறது.

இறுதி ஊர்வலத்திலும், இறுதிக்கிரியைகளின் போதும் மக்கள் பெரும் நெரிசல் ஏதுமின்றி, சாதாரணமாகக் கலந்து கொண்டனர்.

ரூபவாஹினி இறுதி ஊர்வலத்தை ஒளிபரப்பிய சமயம் குறிப்பாக சனக்கூட்டத்தை — அல்லது மக்கள் முண்டியடிப்பது போன்ற காட்சிகளை காட்டவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-எ)

# நிகழ்வுகள்

இந்த ஆட்டம் ஆரம்பமாகும்:

o o o

'ஷப்றா' கிண்ணத்துக்காக யாழ்ப்பாணம் ஜொலி ஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கிரிக்கெட் ஆட்டத் தொடரில் இன்று யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் கழக அணிகள் வருமாறு:-

★ காலை 8 30 மணி :— வீனஸ் வி. க. அணி எதிர் சென்றலைட்ஸ் புளூஸ் அணி (கால் இறுதியாட்டம)

★ பிற்பகல் 1 30 மணி:— யாழ். பல்கலைக்கழக அணி எதிர் பற்றீஷியன் அணி (முதலாம் சுற்று ஆட்டம்)

o o o

யாழ். ஆஸ்பத்திரி வீதி ஐங்கரன் விளையாடடுக் கழகம், கழக மைதானத்தில் நடத்தி வரும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இன்று காலை 8 30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் பாரதி இளைஞர் வி க அணியை எதிர்த்து யுபிற்றர் வி க. அணி மேதும்.

கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை 4 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் பாரதி ''பி'' அணியை எதிர்த்து ஆவரங்கால் ''பி'' அணி மோதும்.

## யாழ்-வன்னி தொடர்புச் சேவை செயலகங்கள்

யாழ்ப்பாணம். மே 8

நெருக்கடி கால யாழ் — வன்னி தொடர்புச் சேவைக்கான செயலகங்கள் யாழ்ப்பாணத்தில் மானிப்பாய் வீதியில் முன்னைய காப்புறுதிக் கூட்டுத்தாபனக் கட்டடத்திலும் —

கிளிநொச்சியில் கரடிப் போக்குச் சந்திக்கு அண்மையில் உள்ள கட்டடத்திலும் — இயங்குகின்றன

மற்றும் தகவல் கையேற்கும் கருமபீடம் ஓமந்தை சோதனை நிலையததில் இயங்குகிறது

இச் செயலகங்கள் காலை 9-00 மணி தொடக்கம் நண்பகல் 12-30 மணி வரையும், பிற்பகல் 1-30 மணி தொடக்கம் மாலை 5-00 மணி வரையும் வாரத்தின் ஏழு நாட்களும் இயங்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## போதிய உரம் கையிருப்பில்

வலி. மேற்கு, மே 8

தொல்புரம் கமநல சேவை நிலையத்தில் போதியளவு உரம் கையிருப்பில் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. விவசாயிகளின் பணப்பயிர் தவிர்ந்த ஏனைய சிறுதானிய உற்பத்தி முயற்சிக்கு இந்த உரங்கள் விநியோகிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அமோனியம் பொட்டாஸ் போன்ற அத்தியாவசியமான உரவகைகள் அவ்வப்பகுதி கிராம உத்தியோகத்தர்களினதும், விவசாய போதனாசிரியர்களினதும் சிபார்சுக்கு அமைய விநியோகிக்கப்படும் என்றும் தொல்புரம் கமநல சேவை பெரும்பாக உத்தியோகத்தர் திரு. ஆர். இராசேந்திரன் தெரிவித்தார். [த-175]

## எலுமிச்சை இன பயிர்களில் புழுதாக்கம்

யாழ்ப்பாணம், மே 8

எலுமிச்சை, தோடை போன்ற கிச்சிலி இன குடும்ப பயிர்களில் இலை சுரங்கப் புழுவின் தாக்கம் காணப்படுவதாக, யாழ் மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் இளம் இலைகள், குருத்துக்கள் பாதிக்கப்படுவதுடன் பயிரின் வளர்ச்சியும் பாதிக்கப்படுகின்றது.

இத் தாக்கத்தைக் கட்டுப்படுத்த இளம் குருத்துக்கள் உருவாகும் போது 'டிப்ரக்ஸ்' என்ற நாசினியில் ஒரு அவுன்ஸை 4 கலன் நீரில் கலந்து விசிறலாம் என அச் செய்திக் குறிப்பில் மேலும் கூறப்பட்டுள்ளது. (த)

## நேரடி பேச்சு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பேசத் தயார் எனக் கூறியுள்ளார். பிரேமதாஸவும் கடந்த இருவருடமாக கூறிய பல்லவிதான் இது.

புதிய ஜனாதிபதி எதிர்க்கட்சிகளுடன் இணக்கமான கருத்தை ஏற்படுத்திய பின்னர் அதனடிப்படையில் புலிகளை அணுகுவார் போல் தெரிகிறது.

புலிகளுக்கு எதிராக நடத்தும் போரில் மேலும் தங்களுக்குச் சுதந்திரம் வழங்கும்படி இராணுவம் புதிய ஜனாதிபதியை நெருக்கக்கூடும் — இப்படி பி. பி. ஸி. மேலும் குறிப்பிட்டது- (உ 3)

## ஜனாதிபதியாக...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வித்தார்.

ஆளும் கட்சி மற்றும் எதிர்க் கட்சி எம். பிக்கள் அப்போது ஆரவாரம் செய்து அதனை வரவேற்றனர்.

பிரதமராகப் பதவி வகித்து வந்த திரு விஜேதுங்க, ஜனாதிபதி பிரேமதாஸா படுகொலை செய்யபபட்டதைத் தொடர்ந்து பதில் ஜனாதிபதியாகப் பதவி ஏற்றார் என்பது தெரிந்ததே

போக்குவரத்துநெடுஞ்சாலைகள் அமைச்சர் விஜேபால மெண்டிஸ் திரு விஜேதுங்காவின் பெயரை சபையில முன்மொழிந்தார், அமைச்சர் சாகுல ஹமீத் வழிமொழிந்தார்

ஜனாதிபதி டி பி விஜேதுங்கா நேற்று பிரதம நீதியரசர் ஜி பி எஸ். டி சில்வா முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து பதவியை ஏற்றுக் கொண்டார்

ஜனாதிபதி செயலகத்தில் இவ் வைபவம் இடம்பெற்றது. (உ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## பந்துபாலன் நவரட்ணம்
(தபால் ஊழியர் வவுனியா)

பந்துபாலன் நவரட்ணம் 2-5 93 இல் காலமானார். அன்னார் பந்துபாலன்- இராசம்மா ஆகியோரின் அன்பு மகனும், இந்திராணி, செல்வராணி, ஜெயராசா (தபால் ஊழியர்), யோகராணி, யோகராசா (கொழும்பு) ஜெயராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், பத்மநாதன் (சவுதி), சவுந்தரராஜன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், கிரிசாந்தன், பிரசாந்தி, சாலினி, டினோசன், டினோசினி, சிந்துசா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 4-5-93 அன்று வவுனியா றம்பைக் குளத்தில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ப ஜெயராசா (ரவி)
(சகோதரன்)

தேவகிரி,
699/2, கே.கே.எஸ் றோட்,
யாழ்ப்பாணம். (25572)

## செல்லத்துரை சிவகுரு

பொலிகண்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், கொக்குவில் பொற்பதி வீதியை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய செல்லத்துரை சிவகுரு (இளைப்பாறிய உடற்பயிற்சி சிகிச்சையாளர்- Physiotherapist, பொற்பதி ஐக்கிய விளையாட்டுக் கழக ஸ்தாபகரும், செயலாளரும்) 29-4-93 காலமானார். அன்னார் நிர்மலாதேவியின் அன்புக் கணவரும், உஷா, பிரகாஷ் ஆகியோரின் அருமைத் தந்தையும், நமசிவாயம், பரஞ்சோதி (புகையிரத திணைக்களம்), சந்திரா ஆகியோரின் அன்புச் சகோதரரும், மாலினி, தவமணிதேவி, கிருஷ்ணபிள்ளை (திருமலை), சரோஜினிதேவி, கிருஷ்ணானந்தன் கனடா), நித்தியானந்தன் (பரந்தன் இரசாயன கூட்டுத்தாபனம்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஏ. சி. வேலாயுதபிள்ளையின் (இளைப்பாறிய புகையிரத தலைமைப் பாதுகாவலர்) அன்புச் சகலனுமாவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் இன்று (8 5-93) காலை 8.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கொக்குவில் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

பொற்பதி வீதி, தகவல்: மனைவி
கொக்குவில். (25573)

## திருமதி
## சங்கரப்பிள்ளை தையல்முத்து
(புளியங்கூடல்)

புளியங்கூடல் ஊர்காவற்றுறையைச் சேர்ந்த திருமதி சங்கரப்பிள்ளை தையல்முத்து 7 ஆம் திகதி காலமானார்.

இவர் காலம் சென்ற சங்கரப்பிள்ளையின் அன்பு மனைவியும், காலம் சென்ற சிவஞானம், தவமணி, வாடாமலர் (ஓய்வுபெற்ற மக்கள்வங்கி முகாமையாளர்), தங்கராசா (பாண்டியன்தாழ்வு பேக்கரி), சாந்தலிங்கம் (ஓய்வு பெற்ற ஆசிரியர், கொக்குவில் இந்துக் கல்லூரி - U K), தேவி, அருந்ததி (ஆசிரியை யா / சரவணை நாகேஸ்வரி மகாவித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், கனகரத்தினம் (சுதா பேக்கரி, வேலணை), முருகையாபிள்ளை (ஓய்வுபெற்ற கட்டட ஒப்பந்தகாரர்) காலம்சென்ற புவனேஸ்வரி, சாந்தாதேவி (ஓய்வுபெற்ற ஆசிரியை யா / இந்து மகளிர் கல்லூரி - U, K), ஜெயராஜா, ஆனந்ததேவன் (இலங்கை தேயிலை சபை, கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமியாரும், ஜெகதீஸ்வரி, மழலைஈஸ்வரி (கனடா), யோகேஸ்வரி (இத்தாலி) தட்சனேஸ்வரி, ஞானமூர்த்தி (இத்தாலி, தவனேஸ்வரி (இத்தாலி), பாலமூர்த்தி (பிரான்ஸ்), தேவமூர்த்தி, ராமமூர்த்தி, தட்சணாமூர்த்தி, வனிதா, சாந்தகுமார் (பிரான்ஸ்), விஜயன் (கனடா), சுரேஸ்குமார் (பிரான்ஸ்), குமார் (கனடா), கண்ணன், மனோகரி, மைதிலி, சிவராஜினி, சதானந்தராஜன் (கனடா), மதிவதனா (U. K), சண்முகப்பிரியா (U. K), தர்சிகா (U. K), கஜரூபன் (U. K), துஷியந்தன், அரங்கன், ஆரணி, அர்ச்சுனன் ஆகியோரின் அன்புப் பேத்தியும், தாசன், நிரோஷன், நிரஞ்சளி, லக்சியா, லோஜன் (கனடா), சிந்து (கனடா), மயூரன் (இத்தாலி), தனுஸ்கரன், பிரசன்னா, பிரவீனன், பிரியபாண்டன் ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (08-05-93) சனிக்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு 22, சீனியர் லேன், வண்ணார்பண்ணையில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
ஆனந்ததேவன்

22, சீனியர் லேன்,
வண்ணார்பண்ணை. (25575)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 08 - 05 - 1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# சுந்தர் மணி விழாவில் நேற்று மக்கள் கூட்டம்

யாழ்ப்பாணம், மே 8

வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கத்தின் மணிவிழா நேற்று மாலை சிறப்பாக நடைபெற்றது. பெரும் திரளான மக்கள் இந் நிகழ்வில் பங்குபற்றினர்.

நேற்று மாலை 4 மணிக்கு இணுவில் சிவகாமி அம்மன் கோவிலில் நடைபெற்ற விசேட பூசைகளில் திரு. சுந்தரலிங்கம் தம்பதியினர் கலந்து கொண்ட பின்னர் அவர்கள் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர்.

பாடசாலை மாணவர்கள் ''பாண்ட்'' இசைக்க, பிரபல நாதஸ்வர தவில் கலைஞர்களின் இசை முழங்க, மாணவர்கள் அணி வகுத்துச் செல்ல அவர் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார்.

வீதி நெடுகிலும் பூரண கும்பம் வைத்து, மலர் மாலை அணிவித்து மக்கள் அவரைக் கௌரவித்தனர்.

இணுவில் கந்தசாமி கோவில் வடக்கு வீதியில் அமைக்கப்பட்டிருந்த விசேட பந்தலை ஊர்வலம் அடைந்ததும் மணி விழாக் கூட்டம் ஆரம்பமானது.

பல பெரியோர்கள், கல்வி மகான்கள் மற்றும் கல்வித் துறை சார்ந்தோர் திரு. சுந்தரலிங்கத்தைப் பாராட்டி உரையாற்றினர். (உ-3)

## யாழ்., நல்லூர் மோட்டார் ஊர்திப் பதிவு

யாழ்ப்பாணம், மே 8

ஸ்ரீலங்கா மோட்டார் ஊர்திப்பதிவுச் சான்றிதழ், இறக்குமதிச் சிட்டை உள்ளோருக்கான — யாழ்ப்பாண உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு உட்பட்ட — பதிவுகள் இன்றுடன் முடிவடைந்து விட்டன என்று அறிவிக்கப்படுகிறது.

நாளை மறுதினம் திங்கட்கிழமையில் இருந்து ஸ்ரீலங்கா மோட்டார் ஊர்திப் பதிவுச் சான்றிதழ் இல்லாத அல்லது வேறு சான்றுகள் இல்லாதவர்களும் பதிவுகளை மேற்கொள்ளலாம் என்றும், யாழ்ப்பாணம், நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு உட்பட்டவர்களும் பதிவுகளை மேற்கொள்ளலாம் என்றும் போக்குவரத்து கண்காணிப்பு பிரிவினர் அறிவித்துள்ளனர். (ஓ)

## பிரபாவுடன்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்கு தீர்வு ஒன்றைக் காண வேண்டும் என்பதில் நான் அக்கறை கொண்டுள்ளேன். அனைவரும் இது விஷயத்தில் அரசுடன் ஒத்துழைக்க வேண்டும்.

இனப்பிரச்சினையைத் தீர்க்கும் பொருட்டு விடுதலைப் புலிகள் தலைவர் திரு. பிரபாகரனுடன் அமைதிப் பேச்சு வார்த்தை நடத்தவே நான் விரும்புகிறேன்.

இரண்டாம் தர, மூன்றாம் தர, நான்காம் தர தலைவர்களுடன் பேச்சுக்கள் நடத்துவதால் பேச்சுக்கள் தான் நீடிக்குமே தவிர ஒரு தீர்க்கமான முடிவு மேற்கொள்ளப்படாது.

தலைவர்கள் தாமே சந்தித்து பிரச்சினையைக் கலந்தாலோசிக்க வேண்டும்.

இனப்பிரச்சினையை தீர்த்து வைப்பதற்கு நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் சிபார்சுகளை நான் எதிர்பார்த்துள்ளேன். நாட்டை ஐக்கியப் படுத்துவதே இன்று நான் எதிர் நோக்கும் முக்கிய பணியாகும் என்றார். (அ-எ-6)

## பிரதமர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பட்டு வருகிறார்.

ஸ்ரீலங்காவில் இதுவரை பதவி வகித்த பிரதமர்களில் ரணில் விக்கிரமசிங்காவே வயதில் மிகவும் இளையவர் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-எ)

## வவுனியாவில்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தளபாடங்கள் ஆங்காங்கே தூக்கி வீசப்பட்டிருந்தன.

நான்கு வீடுகள் தரைமட்டமாகின. ''புக்காரா'' விமானங்களின் பேரிரைச்சலைக் கேட்ட மக்கள் நாலாபுறமும் சிதறி ஓடி பாதுகாப்பிடங்களில் தஞ்சம் புகுந்து கொண்டனர். (உ-3)

கொழும்புத்துறை மேற்கு சனசமூக நிலைய
நூலக வளர்ச்சிக்காக இன்று
மாபெரும் இன்னிசை நிகழ்ச்சி
யாழ். ரமணனின் இசையமைப்பில்
"ராஜன்ஸ்" குழுவினரின்
★ இசை மாலை ★
காலம்: இன்று சனிக்கிழமை இரவு 8 மணி
இடம்: கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலய திறந்தவெளியரங்கு.
பிரவேசம்: 10/- மட்டுமே.
விளம்பர அன்பளிப்பு:
பி. ஐ. பர்ணாண்டோ,
(பல் கட்டுபவர், கண் பரிசோதகர்)
542, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சி-5099)

சிறுவர் போசாக்கு நிலைய நிதிக்காக
மாபெரும்
மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி
இடம் : நீர்வேலி சவாரி மைதானம்
காலம் : 09 - 05 - 93 ஞாயிறு
பி. ப. 2.00 மணிக்கு
ஏ, பி, சி ஆகிய பிரிவுகளுக்கான போட்டிகள் நடைபெறும்.
பிரவேசம்: ரூபா 10/-
(சி-5100)

# மரண அறிவித்தல்கள்

## அப்பையா மரியதாசன்

அப்பையா மரியதாசன் (கந்தசாமி) காலமானார்.

இவர் மேரி ஆனின் (மணி) அன்புக் கணவரும், யோசப் சத்தியதேவன் (நவம்), அன்ரன் அல்பிரட் (ஆசிரியர் - மன்னார்), பவா, செல்வராணி ஆகியோரின் அன்புத் தந்தையும், ரஞ்சி (மன்னார்), மனோரஞ்சினி (மன்னார்), ஜெயபாலசிங்கம் (களஞ்சியப் பொறுப்பாளர், சேரன் பல்பொருள் வாணிபம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று சனிக்கிழமை பி ப. 3 30 மணிக்கு, இலக்கம் 2/2, மருதடி வீதி, யாழ்ப்பாணம் இல்லத்தில் இருந்து நல்லடக்கத்திற்காக புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:

2/2, மருதடி வீதி, ஜெயபாலசிங்கம்
யாழ்ப்பாணம். (25576)

## செல்வன் நமசிவாயம் சிவப்பிரகாசம்
(சிட்டிபாபு)

அராலி மேற்கு காலம் சென்ற V. M. நமசிவாயம்- கனகம்மா (பூமகள் ஸ்ரோர்ஸ், ஜம்பட்டா வீதி, கொழும்பு 13) தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரன் நமசிவாயம் சிவப்பிரகாசம் (சிட்டிபாபு) 2-5-93 இல் கனடாவில் அகால மரணமானார்.

இவர் V. M. செல்லத்துரையின் (கொழும்பு) பெறாமகனும், திருமதி ச. சரோஜினிதேவி (கொழும்பு), காலஞ்சென்ற ந. சந்திரகுமார், திருமதி இ. சாரதா தேவி (கனடா), திருமதி ந சரஸ்வதிதேவி (கனடா), திரு. ந. சூரியகுமார் (கனடா), திருமதி க. சகுந்தலா தேவி (கனடா), திருமதி வ. சற்குணதேவி (கனடா), திருமதி ச. சாந்தினிதேவி (அராலி), திருமதி சு. சந்தானதேவி (கனடா) ஆகியோரின் அன்புத் தம்பியும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் கனடாவில் நடைபெற்றன. இத்தகவலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
அராலி மேற்கு, தருமராசா
வட்டுக்கோட்டை. (மாமன்)
(25577)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org